செ.வெ.எண்: 69 நாள்: 26.01.2017

# புதுக்கோட்டை மாவட்டத்தில் நடைபெற்ற குடியரசுதின விழாவை முன்னிட்டு புதுக்கோட்டை சேமப்படை மைதானத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ் .இ.ஆ.ப., அவர்கள் தேசியக்கொடியை ஏற்றி வைத்து காவல்துறையினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார்.

புதுக்கோட்டை சேமப்படை மைதானத்தில் 68வது குடியரசுதின விழாவை முன்னிட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் இன்று (26.01.2017) தேசியக்கொடியை ஏற்றி வைத்து காவல்துறையினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டு சமாதானப்புறா மற்றும் வண்ண பலூன்களை பறக்க விட்டார்.

சுதந்திர போராட்ட தியாகிகளை கௌரவிக்கும் வகையில் தியாகிகளுக்கு கதர் ஆடைகளை அணிவித்தும், வருவாய்த்துறையின் சார்பில் உழவர்பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் 15 பயனாளிகளுக்கு ரூ.1.24 லட்சம் மதிப்பில் திருமண உதவித்தொகைக்கான காசோலைகளும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பில் 10 பயனாளிகளுக்கு ரூ.38000 மதிப்பில் விலையில்லா தையல் இயந்திரங்களும், முன்னாள் படைவீரர் நலத்துறையின் சார்பில் 2 பயனாளிகளுக்கு ரூ.50000 மதிப்பில் வருடாந்திர பராமரிப்பு மானிய உதவித்தொகைக்கான காசோலைகளும், வேளாண்மைத்துறையின் சார்பில் 10 பயனாளிகளுக்கு தேசிய உணவு பாதுகாப்பு (பயிறு) திட்டத்தின் கீழ் ரூ.4.22 இலட்சம் மதிப்பில் உதவித்தொகைக்கான காசோலைகளும், 7 பயனாளிகளுக்கு தேசிய உணவு பாதுகாப்பு (நெல்) திட்டத்தின் கீழ் ரூ.1,78,600 மதிப்பில் உதவித்தொகைக்கான காசோலைகளும், 1 பயனாளிக்கு தேசிய எண்ணெய் பனை மற்றும் எண்ணெய் வித்துக்கள் திட்டத்தின் கீழ் ரூ.42000 மதிப்பில் உதவித்தொகைக்கான காசோலையும், 6 பயனாளிகளுக்கு தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் கீழ் ரூ.45000 மதிப்பில் உதவித்தொகைக்கான காசோலைகளும், 5 பயனாளிகளுக்கு அட்மா திட்டத்தின் கீழ் ரூ.20000 மதிப்பில் உதவித்தொகைக்கான காசோலைகளும், தாட்கோ மூலம் 4 பயனாளிகளுக்கு ரூ.20,44,915 மதிப்பில் வாகனங்களுக்கான மானியம் மற்றும் வங்கி கடன் உதவிக்கான காசோலைகளும் என மொத்தம் 60 பயனாளிகளுக்கு ரூ.29,64,515 மதிப்பில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன.

மேலும் செய்தி-மக்கள் தொடர்புத்துறை, வருவாய்த்துறை, வேளாண்மைத்துறை, ஊரகவளர்ச்சித்துறை உள்ளிட்ட 26 துறைகளில் சிறப்பாக பணியாற்றிய 280 அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு நற்சான்றிதழ்களை மாவட்ட ஆட்சியர் திரு.சு.கணேஷ்.இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார். மேலும் 9 பள்ளிகளை சேர்ந்த 830 மாணவ, மாணவியர்களின் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றது. இதில் கந்தர்வக்கோட்டை வித்யா விகாஸ் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி முதல் பரிசினையும், கீரனூர் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி இரண்டாம் இடத்தையும், சுப்பிரமணியபுரம் அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி மற்றும் புதுக்கோட்டை வெங்கடேஸ்வரா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி ஆகிய பள்ளிகள் மூன்றாம் பரிசினையும் பெற்றனர்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் முனைவர்.ஜே.லோகநாதன்,இ.கா.ப., மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அ.ராமசாமி, புதுக்கோட்டை சார் ஆட்சியர் திரு.எஸ்.பி.அம்ரித் இ.ஆ.ப., வேளாண் இணை இயக்குநர் திரு.அண்ணாமலை மற்றும் அனைத்துத்துறை அலுவலர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**